அசல்

1.5.1942. அம்பலவாணபண்டாரச் சந்நிதி.

அசல் -1

உ

சிவமயம்.

திருக்கைலாயபரம்பரைத்
திருவாவடுதுறைமடம்
ஆதீனகர்த்தரவர்கள்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
அம்பலவாணபண்டாரச்சந்நிதியவர்கள்

Camp. திருவீழிமிழலை
நாரசிங்கம்பேட்டை P. O.
(S. I. RY.)
1. 5 1942

சென்னையில். மகாஸ்ரீஸ்ரீ. நமது S. கல்யாணசுந்தரமய்யரவர்களுக்கு

தங்கள் பிதாவின் மரணத்தந்தி கிடைக்கப்பெற்றோம். ஆறாத்துயருற்றோம். மேற்படியார்களின். பிரிவால் ஏற்பட்ட. பெரும் நஷ்டம் பொதுவாக தமிழ் உலகிற்கும், சிறப்பாக நம் ஆதீனத்திற்கும். தங்களுக்கும் எவ்விதத்திலும் ஈடுசெய்ய முடியாதது மேற்படியார்கள் நம் ஆதீனத்தில் நமக்குமுன் பதினாறாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்களிடம் கல்வி பயின்று கேள்வி பெற்று தமிழ்ப்பாஷையில் சகல துறைகளிலும் மிக்க பாண்டித்யமடைந்து பல அரிய பெரிய தொண்டுகளாற்றி கடைசி காலம் வரையில் இடையறா அன்பு பூண்டு மிக்க நன்றியறிதலோடு எந்த நாளிலும், திருநாளும். கட்டுரை யெழுதினாலும். பிரசங்கம் புரிந்தாலும். கனவும் நினைவுமென்பதுபோல், மிகப்பெருமையோடு தங்களுக்கு நம் ஆதீனத்தினிடமுள்ள சிரத்தையையும், அன்பையும்-

அசல்

1.5.1942. அம்பலவாணபண்டாரச் சந்நிதி.

அசல் -1



தெரிவித்து வந்துள்ளார்கள். இதை நாம் ஒருநாளும் மறக்கமுடியாத நிலைமையால் ஏங்கிக் கொண்டு துயரடைகிறோம்.

"எளியவாழ்க்கையும் உன்னத லக்ஷியங்களும்," என்பதற்கேற்பவும் "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று," என்பதற்கிணங்கவும், தங்கள் சிறந்த மாதா அவர்கள், வாழ்ந்தார்கள். நம் ஆதீனத்திற்கும் ஒரு பெரும் பூஷணமாகவும் விளங்கினார்கள்.

ஐயரவர்களுக்கு எத்தனை இல்லங்களிருந்த போதிலும் நம் ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கழுக்குன்றத்து மடத்தில் தமது குருபீடத்தின் நிழலிலிருந்து இறைவன் திருவடி நிழலை அடைந்தது மேற்படியார்களின் ஒப்பற்ற குருபக்தி விசேஷத்தை நன்கு விளக்குகின்றது.

ஐயரவர்களின். கல்வி. அறிவும், தொண்டும், பெருமையும், அருங்குணங்களும், எல்லையற்றவை. அத்தகைய சான்றோரின் ஆன்மா. நற்சாந்தி.

அசல்

1.5.1942. அம்பலவாண பண்டாரச் சந்நிதி.

அசல் -1

உ
சிவமயம்.

திருக்கைலாயபரம்பரைத்
திருவாவடுதுறைமடம்
ஆதீனகர்த்தரவர்கள்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
அம்பலவாணபண்டாரச்சந்நிதியவர்கள்

Camp. திருவீழிமிழலை.
நாரசிங்கம்பேட்டை P. O.
(S. I. RY.)
1. 5. 1942.

3.

அடையுமாறு எம் குருவாரம்-. ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளையும் ஸ்ரீ. மஹாலிங்கேசப் பெருமான் திருவருளையுந் துதிக்கின்றோம்.

தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் நமது பூரண அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அம்பலவாணபண்டாரச் சந்நிதி

அசல்

1.5.1942. அம்பலவாண பண்டாரச் சந்நிதி.

அசல் -1



அசல்

1.5.1942. அம்பலவாணபண்டாரச் சந்நிதி.

அசல் -1

